**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவாரூர்**

**<u>2024 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 20-ம் நாள் செவ்வாய்க்கிழமை</u>**

**<u>O.S. 45/2024</u>**

**வாதி தரப்பு சாட்சியாகிய PW1-ன் வாக்குமூலம் (1969 -ம் ஆண்டின் 44 -வது சட்ட ஏற்பாட்டின் படி) திரு. S. விஜய் ஆனந்த், B.E., B.L., மாவட்ட உரிமையியல் நீதிபதி, அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | **:** | **ஆனந்தராஜ்** | **தாலுக்கா** | **:** | **திருவாரூர்** |
| **த/பெ** | **:** | **வைரக்கண்ணு** | **கிராமம்** | **:** | **புலிவலம்** |
| **ஜாதி** | **:** | **BC** | **தொழில்** | **:** | **விவசாயம்** |
| **சமயம்** | **:** | **இந்து** | **வயது** | **:** | **51** |

<u>முதல் விசாரணை</u>

நான் இந்த அசல் வழக்கில் வாதி ஆவேன். எனது தரப்பு சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள விபரங்கள் அனைத்தும் நான் சொல்லித்தான் தயார் செய்யப்பட்டது. மேற்படி நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **(கடந்த 26.04.2012 ம் தேதியிட்ட எனது மனைவி பிரதிவாதி பெயருக்கு எழுதி வைத்த தாவா சொத்தை பொறுத்த தான செட்டில்மெண்ட் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது). (கடந்த 26.10.2017 ம் தேதியிட்ட எனக்கு பிரதிவாதி எழுதிக் கொடுத்த தாவா சொத்தை பொறுத்த கிரய ஒப்பந்தம் அசல் வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது). (கடந்த 27.07.2022 ம் தேதியிட்ட எனக்கு பிரதிவாதி எழுதிக்கொடுத்த தாவா சொத்தை பொறுத்த கிரய ஒப்பந்தம் அசல் வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது). (கடந்த 25.02.2022 ம் தேதியிட்ட எனக்கு பிரதிவாதி எழுதிக்**

**கொடுத்த தாவா சொத்தை பொறுத்த கிரய ஒப்பந்தம் அசல் வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது). (கடந்த 25.02.2022 ம் தேதியிட்ட பிரதிவாதி எனக்கு தாவா 4 வது சொத்திற்கு ரூ.3,70,000/- முன் தொகை பெற்றுக் கொண்டு எழுதிக் கொடுத்த ரசீது அசல் வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது). (கடந்த 29.03.2024 ம் தேதியிட்ட புலிவலம் பஞ்சாயத்தில் தாவா சொத்தை பொறுத்து எனது பெயரில் ஏற்பட்ட சொத்துவரி ரசீது கணினி நகல் வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது). (கடந்த 26.03.2024 ம் தேதியிட்ட தாவா சொத்தை பொறுத்து எனது பெயரில் ஏற்பட்ட மின் கட்டண ரசீது கணினி நகல் வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** கடந்த 26.10.2017 ம் தேதியிட்டு பிரதிவாதி புலிவலம் ஊராட்சிக்கு தாவா சொத்தை பொறுத்து எனது பெயருக்கு வரி ரசீது வழங்க ஆட்சேபணை இல்லை என்று தெரிவித்து அனுப்பிய கடிதம் நகல் தாக்கல் செய்யப்படுகிறது. கடந்த 26.10.2017 ம் தேதியிட்ட பிரதிவாதியால் புலிவலம் இந்தியன் வங்கி கிளைக்கு தாவா சொத்தை பொறுத்து எழுதிக் கொடுத்த Memorandum of deposit of title deeds நகல் தாக்கல் செய்யப்படுகிறது. **(கடந்த 21.04.2024 ம் தேதியிட்ட நான் பிரதிவாதியின் மீது திருவாரூர் தாலுக்கா காவல்நிலையத்தில் கொடுத்த புகார் மனுவின் பிரதி நகல் வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது). (கடந்த 09.07.2023 ம் தேதியிட்ட தாவா சொத்தில் செண்பகராமன் பிள்ளை அவர்களின் வெங்கல சிலை திறப்பு விழாவின் பத்திரிக்கை அசல் வா.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது). (கடந்த 05.09.2022 ம் தேதியிட்ட வ.உ.சிதம்பரனாரின் 151 வது பிறந்த நாள் விழா பத்திரிக்கை அசல் வா.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது). (தாவா சொத்தில் அமைந்துள்ள சிலைகள் மற்றும் கட்டிடம் புகைப்படம் (எண்ணம் 3) சிடி-யுடன் வா.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** கடந்த 08.08.2021ம் தேதியிட்ட தாவா

சொத்தில் நிறுவப்பட்ட சிலை திறப்பு விழா பற்றிய செய்தி தாள்களில் வந்த செய்திகள் தாக்கல் செய்யப்படுகிறது. (**எனது ஆதார் அடையாள அட்டை நகல் அசலுடன் ஒப்பிடப்பட்டது வா.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

ஒம் /- S. விஜய் ஆனந்த்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருவாரூர்.